# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 393 of 1995 | **CNR No.** | **:** | TNKI13-000001-1995 |
| **Name** | **:** | வேடியம்மாள் | **கணவர் பெயர்** | **:** | முருகன் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW4 |
| **Age** | **:** | 66 | **Village** | **:** | திப்பம்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 01.45 PM | **End Time** | **:** | 01.55 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) இந்த வழக்கை யார் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் புட்டி (எ) பார்வதி நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளார். சிவன் யாரென்றால் புட்டியினுடைய மகன் ஆவார். லட்சுமி, இந்திரா யாரென்றால் புட்டி (எ) பார்வதியின் மகள்களாவார்கள். புட்டி (எ) பார்வதியின் கணவர் பெயர் இறந்துவிட்ட ராஜா என்றால் இல்லை, ராஜா யாரென்றால் எனது அண்ணன் ஆவார். எக்கூரான் (எ) வேடிகவுண்டர், துளசியம்மாள் யாரென்றால் எனது தந்தை மற்றும் தாய் ஆவார்கள், அவர்கள் இறந்துவிட்டார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது நாங்கள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். எனது அம்மா மற்றும் அப்பா பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வழக்கை நடத்தும் போது நான் உடன் இருந்தேனா என்றால் என்னையும் விசாரித்தார்கள். என்னுடன் யார் யார் வழக்கை பார்த்துக்கொண்டார்கள் என்றால் அக்கா வேடம்மாள்,

இறந்துவிட்ட கோவிந்தம்மாள் மற்றும் நானும் பார்த்துக்கொண்டிருந்தோம். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது, பெயரை மட்டும் கையொப்பமாக போடுவேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு இந்த வழக்கில் யார் பதிலுரை தாக்கல் செய்தார்கள் என்றால் எனது அம்மா தாக்கல் செய்தார்.

(2) குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai